ஜனநாயகத் தேவதையைத் துகில் உரித்த துச்சாதனர்கள்?

இந்தியாவில் நாடு முழுவதும் மேற்கொள்ளப் பட்டு வரும் வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தச் சட்டப் பணிகள் (Special Intensive Revision SIR) தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பில் நடந்து வருகிறது. அது தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தங்களது மறுப்பு களை மீறியும், தங்களுக்குத் தெரியாமலும் பல உத்தரவுகளைத் தன்னிச்சையாகவே நடைமு றைப்படுத்தியதாகக் கூறித் தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகி யோர் போர்க் கொடி தூக்கியுள்ளனர். இதனால், நாடு முழுவதும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளவர்கள் மத்தியில் அதிர்வலைகள் ஏற் படுத்தியுள்ளன.

கடந்த 10 மாதங்களில் சுமார் 14 முறை தலை மைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் பல்வேறு உத்தரவுகளுக்கு ஆணையக் கூட்டத்தில் மறுப்பு தெரிவித்ததுடன், ஒன்றியச் செயலாளருக் குக் கடிதம் எழுதி எதிர்ப்பு தெரிவித்த போதும்; அத னைக் கண்டு கொள்ளாமல் நடைமுறைப்படுத்திய முறைகேடான செய்திகளானது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்துத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமா ரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும்; அவரைக் கைது செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகளால் கண்டனக் குரல் எழுப்பப்பட்டு வருகின்றன. ஞானேஷ் குமார் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி, நாடு முழுவதும் அவருக்கு எதிராக இளை ஞர்கள், மாணவர்கள், பெண்கள் மத்தியில் எழுச்சி ஏற்பட்டுப் போராட்டங்கள் தீவிரம் அடைந்து வரு கின்றன.

இந்தியப் பிரதமர் மோடி, அமித்ஷாக்கள் பின்ன ணியில் எஸ்.ஐ.ஆர். அறிமுகப்படுத்தப்பட்டதற் கான உண்மையான காரணம் தமது அரசியல் எதிரிகளை வீழ்த்துவதற்கான அரசியல் சதி, மோச டித் திட்டம் என்னவென்று தெரிய வந்துள்ளது. தமிழகத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் ஒரு இலட்சம் வாக்குகள் நீக்கப்பட்டு, அவர் 9,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார். மேற்கு வங்கத் தில் மம்தா பானர்ஜியின் தொகுதியில் 51,000 வாக் குகள் நீக்கப்பட்டு, அவர் 15 ஆயிரம் வாக்கு வித்தி யாசத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளார். அதே போல டெல்லியில் அரவிந்த கெஜ்ரிவால் தன் தொகுதியில் 40 ஆயிரம் வாக்குகள் நீக்கப்பட்டு 4,000 வாக்கு களில் தோல்வி கண்டுள்ளார்.

தி.மு.க. வெற்றி வாய்ப்பு இழந்துள்ளது. த.வெ.க.வுக்கு 108 தொகுதிகள் கிடைத்திருப்பது; தி.மு.க. கூட்டணிக் கட்சியின் ஆதரவு கொடுத்திட ஆணையம் போட்டச் சூழ்ச்சித் திட்டத்தால் முறை கேடுகளுக்குத் துணை போயுள்ளது என்பதை, ஆணையர்களுக்குள் நடந்த சண்டையே உறுதிப் படுத்தியுள்ளது. தமிழ்நாடு தேர்தல் திருடப்பட் டுள்ளது என்பதும் இதனால்தான் தேர்தல் ஆணை யம் நியமித்த தலைமைச் செயலாளரை மாற்றா மல் அப்படியே வைத்துள்ளது என்பது தேர்தல் ஆணையத்தை இன்னும் கண்டிக்காத கள்ள மவு னம் த.வெ.க.வின் விஜய் அரசு தொடர்கிறது என் றும் தெரிய வருகிறது.

புதிய வாக்காளர்களுக்கான விண்ணப்பப் படி வத்தில் இரு தேர்தல் ஆணையர்களின் எதிர்ப்பை மீறிப் பெற்றோர் அல்லது தாத்தா, பாட்டியின் பெயர் விவரம் கேட்கும் புதிய கேள்வி சேர்க்கப்பட்டது; எந் தவித விதிமுறைகளும் இல்லாமல் கொண்டுவரப் பட்ட இந்த மாற்றம் சட்டவிரோதமானது என்று இரு தேர்தல் ஆணையர்களும் சுட்டிக்காட்டி உள்ள நிலையில்; தலைமைத் தேர்தல் அதிகாரி தன்னிச் சையாகப் போட்ட ஆணைகள் எந்தவித விதிமுறை களும் இல்லாமல் கொண்டுவரப்பட்ட இந்த மாற் றம் அங்கீகாரம் அற்றவை, சட்ட விரோதமானவை என்று சுட்டிக்காட்டி உள்ளனர்.

"தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும்; எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும்; தேர்தல் ஆணையம் மீதான நம்பகத் தன்மையை முற்றிலுமாக சீர்குலைத்துள்ளதால் இதனைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடி யாது; இந்திய ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட மிக மோசமான தாக்குதலாகும். சுதந்திரமாகவும், வெளிப்படுத்த தன்மையோடும், அரசியல் குறுக்கீடு கள் இல்லாமலும் செயல்பட வேண்டிய உச்ச மைப்பு மீது மிகப்பெரும் களங்கம் படிந்துள்ளது" என்று தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, மகாராஷ்டிரா, மேற்குவங்கம், ஆகிய மாநிலங்களுக்கு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலை ரத்து செய்ய வேண்டும்; இந்த மூன்று மாநிலங்களிலும் வாக்குச் சீட்டு அடிப்படையில் தேர் தல் நடத்தப்பட வேண்டும்; தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரைக் கைது செய்ய வேண்டும்; அவர் தன்னிச்சையாக எடுத்த அனைத்து முடிவுகளையும் ரத்து செய்ய வேண் டும்; சிவசேனா, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை இரண்டாக உடைத்துப் பல முடிவு களைத் தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது; தேர் தல் ஆணையத்தின் இத்தகைய முடிவுகளை மீண் டும் மறு பரிசீலனை செய்திட வேண்டும்" என்று மராட்டிய முன்னாள் முதல்வர் சிவ சேனாத் தலை வர் உத்தவ் தாக்கரே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இது போலத் தமிழகத்தின் மு.க.ஸ்டாலின், கொல்கத்தாவில் மம்தா பானர்ஜி, கேரளத்தில் பின ராய் விஜயன், டெல்லியில் அரவிந்த் கெஜ்ரிவால் என்று பா.ஜ.க.வின் கொள்கைகளுக்கு எதிராக முழக்கமிட்ட அனைத்து முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும் அதிர்ச்சியான தேர்தல் தோல்வி அடைவதற்குக் காரணம் தேர்தல் ஆணை யம்தான் என்று கரப்பான் பூச்சி ஜனதா கட்சித் தலைவர் அபிஜித் திப்கே (Cockroach Janatha Party) கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், நாடு முழுவதும் 13 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். வேண்டும் என்றே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது குறி வைத்து ஜனநாயகத் திற்கு எதிராக அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளனர்.

ஆகவே, உடனடியாக ஞானேஸ்வரன் பதவி விலகச் செய்ய வேண்டும்; எஸ்.ஐ.ஆர். நிறுத்தப்பட வேண்டும்; 2025 ஜனவரி மாத வாக்காளர் பட்டியல்படி நடைமுறைப்படுத்த வேண்டும்; 2023 ஆம் ஆண்டுத் தேர்தல் ஆணையர் நியமனச் சட்டத்தை நீக்கி, அதில் சீர்தி ருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்; ஞானேஷ் குமார் பதவி விலகாவிட்டால் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 முதல் போராட்டம் தொடரும்" என்று அறைகூவல் விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் கடமைகளாகவும், பணிகளாகவும் உள்ள வெளிப்படைத் தன்மை, சுதந்திரம், அனைவருக்கும் வாக்குரிமை அடிப் படை இவைகள் தலைமைத் தேர்தல் ஆணைய ரால் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன என்று எம்.ஏ.பேபி, டி. இராஜா உட்பட இடதுசாரி தலைவர் கள் கண்டனம் தெரிவித்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி ஏற் பட்ட நாளிலிருந்து, மதவாத நோக்கோடு இந்திய அரசியலமைப்புச் சட்டம் சிதைக்கப்பட்டு வருகிறது. தன்னாட்சி அமைப்புகளான வருமானவரித் துறை, அமலாக்கத்துறை, புலனாய்வு அமைப்பு (சி.பி.ஐ.) போன்ற துறைகளுடன் தேர்தல் ஆணை யமும் பா.ஜ.க.வின் கைத்தடிகளாக ஆக்கப்பட்டு வருகின்றன. இதற்குப் பல்வேறு சான்றுகள் இருக் கின்றன.

உச்ச நீதிமன்றம் தந்த வழிகாட்டுதல் அறிவுரை யின்படி, தேர்தல் ஆணையர்கள் தேர்வு செய்ய இந்தியப் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தலைமை நீதிபதி அடங்கிய தேர்வுக் குழுவைப் புறக்கணித்து, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக் குப் பதிலாக ஒன்றிய அமைச்சரை நியமிக்க வகை செய்யும் சட்டம் 2023 நாடாளுமன்றத்தில் சர்வா திகார நோக்கோடு மோடி அரசால் நிறைவேற்றப் பட்டது. மோடியும், அமித்ஷாவின் கைத்தடிகளைத் தேர்தல் ஆணையர்களாகக் கொண்டு வருவதற் கான முயற்சிதான் இது எனத் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாகக் கண்டனம் தெரிவித் தன. ஆயினும், சட்டம் நிறைவேறிய நிலையில் இதனை எதிர்த்துத் தற்போது, உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினர் மனுக்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு இறுதியில், நாடு முழுவதும் ஒரே வாக்காளர் பட்டியலைக் (Common Electrol Roll) கொண்டு வருவது குறித்து; ஒன்றிய அரசின் சட்ட அமைச்சர் எழுதிய கடிதத்தின் பெயரால், பி. கே.மிஸ்ரா தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத் திலே தேர்தல் ஆணையர்களான தலைமைத் தேர் தல் அதிகாரி சுசில் சந்திரா (Sushil Chandra), இரா ஜீவ் குமார் (Rajiv Kumar), அனூப் சந்திரா பாண்டே (Anup Chandra Pandey) போன்றோர் கலந்து கொண்டதற்கு எதிர்க்கட்சிகளால் கடும் எதிர்ப்பு தெரி விக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் தேர்தல் ஆணை யம் என்பது தனித்தன்மை, சுதந்திரமான அமைப்பு இதனைத் தனது பா.ஜ.க.சட்சியின் அமைப்பாக மாற் றுவதா? என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் மராட்டிய மாநிலம் வார்தா மாவட்டத்தில் (142019) அன்று தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்ட மோடி, காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தியைக் கேரள வயநாட்டில் போட்டியிடுவதைத் தாக்கிப் பேசினார். "பெரும்பான்மையினர் சிறுபான்மை யினராக இருக்கும் ஒரு தொகுதியை வயநாடு தேடி காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தி தஞ்சம் புகுந் துள்ளார்" என்று விமர்சித்தார். இந்தப் பேச்சு இந்து கிறிஸ்தவரிடையே மதவாத உணர்வுகளைத் தூண்டுகிறது என்று காங்கிரஸ் கட்சித் தேர்தல் ஆணையத்தில் புகார் கொடுத்தது. தலைமைத் தேர்தல் அதிகாரிகள் இருவர் அவரது பேச்சு "குற்ற மற்றவர்" (கிளீன் சிட்) என்று சான்றிதழ் வழங் கியது.

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



ஆனால், அதற்கு 'மாறாக மோடியின் மதவாத பேச்சை ஏற்றுக் கொண்ட தேர்தல் ஆணையர் .அசோக் லவோசா என்பவர் "பிரதமர் மோடி பேசி யது மதவாதப் பேச்சு" என்றும் "இது தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள்" என்றும் மாறுபட்டக் கருத்துக்களை (Dessending notes) ஆணையத் தில் பதிவு செய்தார். இதனால் மோடி மே 18 முதல் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் பங்கேற்க முடியாத சூழ்நிலையில் தவித்தார். பெரும்பான்மை ஆணை யர்கள் தந்த முடிவின்படி மோடி மீதுள்ள குற்றச்சாட்டு விலக்கிக் கொள்ளப்பட்டு "குற்றமற்ற வர்" (கிளீன் சிட்) என்றது. ஆனால், அதன் பின்பு கட்டாய ஓய்வு பெற்று லவோசா ஆசிய வளர்ச்சி வங்கியில் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவர் சென்றபின், 2019 செப்டம்பரில் பல்வேறு நிறுவனங்களில் இயக்குனராக இருந்த அவர் மனைவி நோவெல் சிங்கால் லாவோசா மற்றும் அவரின் சகோதரரரின் மகன் வீடு அலுவலகங்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. நேர்மையாக செயல்பட்ட அசோக் லவோசா மனைவி, சகோதரர் மகன் குடும்பம் குறி வைத்து மோடியின் ஒன்றிய அரசால், சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. தேர் தல் ஆணையம் மோடியின் செயலுக்கு துணை போனது. அன்றைக்கே எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. அதுபோலத் தான் ஓரிசாவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு ஐஏஎஸ் அதிகாரி பாண்டி யன் என்பவர் காணாமல் போன பூரிக்கோயில் சாவி தமிழ்நாட்டுக்கு சென்று விட்டது என்று திருட் டுப் பட்டம் சூட்டி மோடி பேசினார். தி.மு.க. மற்றும் தமிழக மக்கள் எதிர்ப்பு தெரிவித்துப் புகார் கொடுத்த போதும், மோடியின் கைத்தடியான தேர்தல் ஆணையம் ஒன்றும் கண்டுகொள்ளவில்லை என் பது நினைவு கூரத்தக்கது.

மனோரஞ்சன் ராய் என்பவர் மும்பை உயர்நீ திமன்றத்தில் 2018 மார்ச் 27ஆம் தேதி ஒரு வழக்கு தொடர்ந்தார். 20 லட்சம் மின் அணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) காணாமல் போயின என் றும், எண்ணிக்கை ஒப்பீடுகள் குறைபாடுகள் உள் என என்றும் ஒரு பொதுநல வழக்கு தொடர்ந்தார். இது பற்றி ஆங்கிலம் ஏடு ஃப்ரண்ட் லைன் எழுதி யது. ஆர்.டி.ஐ. மூலம் பெற்ற தரவுகள் மூலம் வழக்கு போட்டிருந்தார். ஆனால் அது பற்றிய வழக் கில் தேர்தல் ஆணையம் தந்த தரவுகள் இன்னும் மர்மமாக இருக்கின்றன. காரணம் வழக்கைச் சரியாக நடத்தமுடியாமல் நீர்த்துப்போனது.

இந்திய அரசியல் சட்டப்படி இந்தியத் தேர்தல் ஆணையம் என்பது நேர்மையான தேர்தல்களை நடத்துவதற்காக ஜனவரி 25 1950 இல் உருவாக் கப்பட்டது. இந்நாளைத் தேசிய வாக்காளர் நாளா கக் கொண்டாடுகிறோம். இது ஒரு மிக முக்கியமான சுதந்திரமான தன்னிச்சையான அமைப்பாகும். இவ்வாணையத்தில் ஒரே ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மட்டும் செயல்பட்டு வந்தார். 1993இல் மூன்று உறுப்பினர்கள் கொண்ட (ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்) பங்கு பெரும் குழுவாக மாற் றப்பட்டது. அவர்களது பணிக்காலம் ஆறு ஆண்டு காலம், 65 வயது வரையில் பதவி இல் நீடிப்பர். இவர்களை இந்தியக் குடியரசுத் தலைவர் தான் நியமிப்பார்.

இந்தியாவில் மக்களாட்சி அல்லது ஜனநாயக தத்துவப்படி எந்த விதப் பாகுபாடுமின்றித் தேர்தல் களை நடத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். நாடாளுமன்ற, மக்களவை, மாநிலங்கவைத் தேர் தல்கள், இந்தியக் குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல் நடத்துதல், மேற்பார்வையிடு தல், கட்டுப்படுத்துதல் என்பவை அவர்கள் பணியா கும். இந்திய அரசு அரசியல் அமைப்பு சட்டம் Part XV யில் உள்ள பிரிவு உறுப்பு 324 தேர்தல் ஆணையம் அதிகாரம், சுதந்திரம், மற்றும் செயல் பாடுகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. இப்பிரிவு தேர்தலை நடத்துவதற்கான, முழு மையான மேற்பார்வை வழிகாட்டுதல் மற் றும் கட்டுப்படுத்துதல் அதிகாரத்தைத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்குகிறது. இது முற்றி லும் சுதந்திரமான, நேர்மையான தேர்தல் (Free and Fair Election) என்பது இந்திய அரசி யலமைப்பின் அடிப்படை அமைப்பாக (Basic structure) கருதப்படுகிறது.

தேர்தல் ஆணையம் இதற்காக தேர்தல் விதிமு றைகளை (Model Code of Conduct) அமல்படுத்து கிறது. வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் பணப் பலம், தசை பலம் அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்தி வாக்காளர்களை அச்சுறுத்தக் கூடாது என்பது உறுதி செய்கிறது. தகுதி உள்ள அனைத் துக் குடிமக்களும் அச்சமற்றத் தன்மையோடு வாக் களிக்கும் சூழலை உருவாக்க வேண்டும். ஆனால், நமது தேர்தல் ஆணையம் அப்படி செய் வதில்லை. அதிலும் மோடி ஆட்சி வந்ததிலிருந்து வாக்காளர்களை வசதி வாய்ப்பை பயன்படுத்தி அறுவடை செய்து அதிகாரத்தைக் காட்டி அனைத் தையும் விலை கொடுத்து வாங்குகிறது.

தேர்தல் ஆணையம் என்பது தன்னிச்சை யான, சுதந்திரமான, சுயாட்சி அமைப்பு. ஆளும் அரசாங்கமோ, அரசியல் கட்சிகளோ இதன் செயல் பாடுகளில் தலையிட முடியாது. இதன் சுதந்திரத்தை பாதுகாக்க அரசியல் அமைப்புச் சட்டம் சில முக்கிய பாதுகாப்புகளை வழங்கி உள்ளது. ஒரு தலைமை/ தேர்தல் ஆணையரை அவ்வளவு எளிதில் பதவி யில் இருந்து நீக்க முடியாது. உச்ச நீதிமன்ற நீதி பதியை நீக்குவதற்குப் பின்பற்றப்படும் அதே கடின மான நாடாளுமன்ற முறை மூலம் மட்டுமே இவரைப் பதவியில் இருந்து நீக்க முடியும். சுருக்க மாகச் சொன்னால் இந்தியாவின் மாபெரும் ஜனநா யக திருவிழா தேர்தலை எவ்வித பாகுபாடும் இன் றித் தன்னிச்சையாகவும், நேர்மையாகவும் நடத்தும் உச்சக்கட்ட அதிகாரம் கொண்ட அமைப் புதான் இந்தியத் தேர்தல் ஆணையம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், பா.ஜ.க. ஆட்சியில் தேர்தல் ஆணையம் ஒரு கிளைக் கட்சி யாகவே மாறிவிட்டது அல்லது மாற்றப்பட்டு விட்டது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வலிமை யைக் காட்டியவர் டி. என். சேசன் என்ற அதிகாரி யாவார். ஹிமாச்சல பிரதேசத்தில் ஆளுநர் குல் ஷேர் அகமது பதவி விலகல், பஞ்சாப் தேர்தல் நிறுத்தம் என தன் வல்லாண்மையைக் காட்டியவர்.

1994 ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற நேரம். தேர்தல் ஆணையர் டி.என்.சேஷன் தேர்தல் விதிகளையும், நடத்தை விதிகளையும் நாடு முழுவதும் மிகக் கடுமையாக அமல்படுத்தினார். அவருக்கு எதிராக தமிழ்நாட்டில் முதல்வராக இருந்த ஜெயலலிதா, நடத்திய சர்வாதிகார நிகழ்வுகள் நாடறிந்ததே.

ஆனால் அதற்கெல்லாம் அஞ்சாத தேர்தல் ஆணையாளர் டி.என்.சேசன், கடுமையான முறையில் தேர்தல் விதிமுறைகளை நடைமுறைப் படுத்தி வந்தவர்தான் அவர்.

அப்படிப்பட்ட தேர்தல் ஆணையர் டி.என். சேஷன் ஒன்றிய அரசுடன் போரிட்டார். அதன் கார ணமாக, உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்புத் தான் (TN Seshan_VsUnion of India 1995) இன்றைக்கு நடை முறையில் இருந்து வருகிறது. காரணம் என்ன?

முன்பு இந்திய தேர்தல் ஆணையம் தலை மைத் தேர்தல் ஆணையரை மட்டுமே கொண்ட ஒரு நபர் அமைப்பாக இருந்தது. டி.என். சேஷன் தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்தபோது, 199096 அவரது அதிரடி சீர்திருத்தங்களை கட்டுப் படுத்த பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அரசு அக்டோபர் 1993 இல் எம்.எஸ்.கில், ஜி.வி.ஜி கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரை கூடுதல் தேர்தல் ஆணையாளர் களாக (ECS) நியமித்தது.

தனது அதிகாரத்தைக் குறைக்கும் இந்த நட வடிக்கையை எதிர்த்து டி. என். சேஷன் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் 1995 ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு பின்வருவனவற்றை உறுதி செய்தது. தேர்தல் ஆணையத்தைப் பல உறுப்பினர்கள் கொண்ட அமைப்பாக (Multi member body) மாற்றிய அரசாங்கத்தின் முடிவு சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும். இந்தியத் தலை மைத் தேர்தல் ஆணையர், இதரத் தேர்தல் ஆணையர்கள் ஆகிய மூவருக்கும் சமமான அதி காரங்கள் மற்றும் தகுதிகள் உண்டு. முடிவுகளை எடுக்கும் போது ஒருமித்த கருத்து இல்லாவிட்டால் பெரும்பான்மை (Majority rule 2:1) அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையர்களின் அதிகாரம், 3 பேரில் நீக்கம் அரசியல் அமைப்புச் சட்ட உறுப்பு 324 உட் கூறு (5) படி, மூன்று தேர்தல் ஆணையருக்கும் உள்ள அதிகாரங்கள் மற்றும் அவர்களை பதவி லிருந்து நீக்கும் நடைமுறைகளில் முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) மற்றும் இதர இரு ஆணையர் கள் சம அதிகாரம் கொண்டவர்கள். தலைமைத் தேர்தல் ஆணையருக்கு இணையான சம அதிகா ரம் மற்றும் வாக்குரிமை கொண்டவர்கள்" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் தான் தேர்தல் ஆணையச் சட்டம் உருவாக்கப்பட்டது. தற்போது இந்தியத் தேர்தல் ஆணையத் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், இதர தேர்தல் ஆணையர்கள் சுப்பீர் சிங் சாந்த், விவேக் ஜோஷி ஆகியோர் உள்ளனர். அண்மையில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான முடிவு களில், தேர்தல் ஆணையர்களில் சாந்து, ஜோஷி ஆகிய இருவரும் எஸ் ஐ ஆர் குறித்துத் தங்களது ஆட்சேபனைகளை 14 முறை பதிவு செய்துள்ளதா கவும், மீறித் தலைமைத் தேர்தல் ஆணையர் தன் னிச்சையாக முடிவு எடுத்தது தவறானது என்றும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு செய்தி வெளியிட்டு அம்பலப்படுத்தியுள்ளது.

இதன் அடிப்படையில் தலைமைத் தேர்தல் ஆணையர் தன்னிச்சையான முடிவுகளை எடுத்த தாக கூறி, ஞானேஷ் குமாரை உடனடியாகப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனத் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் உட்பட இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மூத்த வழக்கறி ஞர் கபில்சிபல் போன்றவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர் . மோடி ஆட்சியில் மூடி வைக்கப்பட்ட ஜனநாயகத்திற்கு எதிரான தேர்தல் அத்துமீறல்கள் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட் டில் தி.மு.க., டெல்லியில் ஆம் ஆத்மி, மேற்கு வங் கத்தில் திரிணாமுல் காங்கிரஸ், கேரளாவில் இடது கம்யூனிஸ்ட், மராட்டியத்தில் சிவசேனா போன்ற கட்சிகள், அதன் தலைவர்கள் தோற்கவில்லை; தோற்கடிக்கப்பட்டு இருக்கின்றார்கள்!

இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிகளில்

செய்தியாளர்களின் செல்போன்களைப் பறிப்பதா?

திருப்பூர் மாவட்ட செய்தியாளர்கள் சங்கம் கண்டனம்!

திருப்பூர், அக். 1 –

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது, அமைச்சர் ஆனந்த் காலில் தவெக நிர் வாகிகள் விழுந்த காட்சிகளைப் படம் பிடித்த 'நியூஸ் 18 தமிழ்நாடு' செய்தித் தொலைக்காட்சி செய்தியாளரின் செல் போனைப் பறித்து, அதில் பதிவான காட் சிகளை வலுக்கட்டாயமாக நீக்கியுள்ள அராஜகச் செயலும், அதேபோல மதுராந் தகம் தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் பகுதியில் பிரச்சார நிகழ்வுகளைப் படம் பிடித்த செய்தியாளர்களின் செல்போன் களை மறித்தும், பறித்தும் ஈடுபட்டுள்ள அத்துமீறல்களும் ஊடக சுதந்திரத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும்.

செய்தியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய காலக்கட்டத் தில், அரசின் மற்றும் ஆளும் கட்சி சார்ந்த நிகழ்வுகளிலேயே ஊடகவியலா ளர்களுக்கு எதிராக இதுபோன்ற அத்துமீ றல்களும் அச்சுறுத்தல்களும் தொடர்ச்சி யாக நடைபெறுவது மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது.

இச்சம்பவங்களுக்கு திருப்பூர் மாவட்ட செய்தியாளர்கள் சங்கம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித் துக் கொள்கிறது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகவியலாளர்கள் தங்களது கடமையைச் சரியாகச் செய்வ தைத் தடுக்கும் வகையிலும், உண் மையை மறைக்கும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்படும் இத்தகைய மிரட்டல் போக்குகள் எக்காலத்திலும் ஏற்கத்தக் கது அல்ல. குறிப்பாக, பொதுவெளியில் நடக்கும் நிகழ்வு களைப் பதிவு செய்யும் செய்தியாளர்களை மிரட்டுவதும், அவர்க ளின் பணித்தடைகளை ஏற்படுத்துவதும் ஊடக சுதந்திரத்திற்கு விடப்படும் நேரடி சவாலாகும். காவல்துறையினர் முன்னி லையி லேயே இதுபோன்ற அத்துமீறல் கள் அரங்கேறியுள்ளதும், செல்போ னைப் பறித்து மிரட்டல் விடுத்தவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்ததும் காவல்துறையின் நடுநிலையான செயல்பாட்டின் மீது கடும் சந்தேகத்தை எழுப்புகிறது. ஊடகவிய லாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தவறி, அத்துமீறலுக்கு மறைமுகமாகத் துணைபோன சம்பந்தப்பட்ட காவல்து றையினர் மீது துறை ரீதியான உரிய நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ கம் முழுவதும் செய்தியாளர்கள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி தங்களது ஜனநாய கக் கடமையைத் தடையின்றி ஆற்றுவ தற்கான பாதுகாப்பான சூழலை அரசு உடனடியாக உறுதி செய்ய வேண்டும்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும்கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு பாகம் எண் 207 அச்சிறு பாக்கத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல்மாலிக் தலைமையில் இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், துணை அமைப்பாளர் முரளீஸ்வரன், வேலூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.முரளி பாஸ்கர், இளம்பேச்சாளர் ஜாஸ்மின் ஆகியோர் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் ஒன்றியம் காளிப்பாளையம் ஊராட்சி ராஜ் நகர் பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரிக்கும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு ஆகியோர் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கலை கதிரவன் (தென்காசி), தி.மு. இராசேந்திரன் (கடையநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூலனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மு.ஆ.கோவிந்தசாமி, ஒன்றிய செயலாளர்கள்,சிவக்குமார் ஜே.கே.ரமேஷ், ஜெயா ஐயப்பன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மஹ்முதா, வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், துணை அமைப்பாளர்கள் எட்வின்,தர்மராஜ், கதிர், சபிக்அலி, கழக நிர்வாகி பாலசுப்பிரமணியம் உள்பட தென்காசி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மூலனூர் ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.